தமிழீழத் தேசியப் படைப்புக்களுக்கான தணிக்கைக் குழுமம்
தமிழீழ அரசியல்துறை
Thamil Eelam National Creative Content Censor Committee - (TEN4C)

TAT/TEN9BL/20250918/003

2025/09/18

# "வெந்து தணிந்தது காடு"

## *திரைப்படத்தை தணிக்கைக் குழுமம் தடை செய்கிறது*

தமிழீழ விடுதலைப்போராட்ட வரலாற்றைத் தாங்கிநின்ற ஒரு புரட்சிகரமான சமூகப் புறநிலையிலிருந்து தான் உன்னதமான திரைப்படைப்புகள் பிறக்க முடியும். தமிழீழமாகிய எமது தாயக மண்ணில் 2009க்கு முன்னரான 30 ஆண்டுகள் ஒரு வீரவிடுதலை வரலாறு படைக்கப்பட்டுள்ளது. இலங்கை அரசால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட இன அழிப்புக்கு எதிரான போரில், எமது போராளிகளும், மக்களும் புரிந்த பல அர்ப்பணிப்புக்கள் நிறைந்த உண்மைகளை கருப்பொருளாகக் கொண்டு, உன்னதமான சமூக, விடுதலைத் திரைப்படைப்புகளை உருவாக்கக்கூடிய சாத்தியங்கள் உள்ள இன்றைய சூழலில், **"வெந்து தணிந்தது காடு"** போன்ற விடுதலைப்போராட்ட காலத்தில் நடைபெற்ற முக்கியமான பல சம்பவங்களைத் திரிபுபடுத்தியும், விடுதலைப் போராட்டத்தின் உயரிய விழுமியங்களை கொச்சைப்படுத்தியும் வெளிவரும் திரைப்படைப்புக்களை நாங்கள் வன்மையாக எதிர்க்கின்றோம்.

இந்தத் திரைப்படைப்பிலுள்ள அகற்றப்பட வேண்டிய பகுதிகளை நாங்கள் ஏற்கனவே 06.07.2023, 07.07.2023, மற்றும் 08.07.2023 இல் வெளியிடப்பட்ட அறிக்கைகள் மூலம் சுட்டிக்காட்டியிருந்தோம். அந்தத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்பட்ட போதும், திருத்தப்பட்ட திரைப்படத்தை எமது தணிக்கைக்குழுமத்தின் பார்வைக்குட்படுத்தக் கோரிய போது, படத்தின் இயக்குனர்,மற்றும் ஈழத்தமிழர் திரைப்படச்சங்கம்-பிரான்ஸ்**(LIFT)** என்ற அமைப்பால் அந்த வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டுள்ளது. அத்தோடு **"தியாகி திலீபன்"**அவர்களின் உண்ணாவிரத நினைவுகூரல் நடைபெறும் இந்நாட்களில், தமிழீழ விடுதலைப் போர்க்கால நிகழ்வுகளை திரிபுபடுத்தும் உள்நோக்கத்தோடு, உருவாக்கப்பட்டதோர் திரைப் படத்தை, வருகின்ற ஞாயிற்றுக்கிழமை 21.09.2025 அன்று ஈழத்தமிழர் திரைப்படச்சங்கம்–பிரான்ஸ், **(LIFT)** பாரிசில் திரையிடத் திட்டமிட்டுள்ளனர்.

கடந்தகால எமது ஆயுதப் போராட்டத்தின் நியாயாதிக்கத்தை, நாம் இப்போது முன்னெடுக்கும் அரசியல் போராட்டங்கள் ஊடாக நிரூபிக்க வேண்டிய கடப்பாடு ஒவ்வொரு உணர்வுள்ள தமிழனுக்கும் உள்ளது. விடுதலைப் போராட்டக்கால உண்மை வரலாற்றை ஆழமாகத் தரிசிக்கும் கலைப் படைப்புகளையே விடுதலைக்கான படைப்புகள் எனலாம். இந்த விடுதலைப் படைப்புகள், எமது தேசத்தையும், இனத்தையும் ஊடுருவி நிற்கும், இன அடக்கு முறையின் கொடூரத்தை பன்னாட்டு சமூகத்திற்குச் சித்தரித்துக் காட்ட வேண்டும். அத்தோடு எமது மக்களிடையே,இன்று எம்மை அழிக்க நினைக்கும் சக்திகளால் மேற்கொள்ளப் படும், நுண்அரசியல் அணுகுமுறையூடாக, எமக்குள் ஊடுருவி எமது மக்களின் விடுதலைப் போராட்ட உணர்வை மழுங்கடிக்கும் கைங்கரியம் தொடர்பான விழிப்புணர்வை மக்களுக்கு ஊட்டவேண்டும்.

2009மே மாதத்திற்குப் பின்னர் தாயகத்திலும், புலம்பெயர் நாடுகளிலும் வீரியம் பெற்றுவரும் உன்னதமான அரசியல் போராட்டப்பாதையில் முன்னேறிச்செல்லும் எமது விடுதலைப் போராட்டத்தைக் களங்கப்படுத்தும் நோக்குடன் பல்வேறு சக்திகள் செயற்பட்டு வருகின்றன. நீண்ட காலமாகவே இந்த சக்திகள், எமது போராட்டத்திற்கு எதிராக திட்டமிட்ட ஒரு பொய்ப் பிரச்சார யுத்தத்தை நடத்தி வருகின்றன. விடுதலைப் போராட்டக்காலத்தில் நடந்த உண்மை வரலாற்றைத் திரிபுபடுத்திப் பொய்களை விதைக்கும் விஷமத் தனமான பிரச்சாரத்தை செய்துவருகின்றன. மக்களின் விடுதலை உணர்வை மழுங்கடித்து, மக்களை குழப்பித் திசை திருப்பி, அரசியல் உரிமைப் போராட்டத்தை நசுக்கி விடும் நாசகார நோக்கில், இந்த நுண்அரசியல் பிரச்சாரப்போர் பல்வேறு வடிவங்களில் முடுக்கி விடப்பட்டுள்ளது.

நாம் எமது இளையோர்களிடம், மக்களிடமும் விடுக்கும் வேண்டுகோள் யாதெனில்,பொய்மையைப் பிரதான ஆயுதமாகக் கொண்டு எமது விடுதலைப்போராட்ட வரலாற்றுக்கு எதிராக தொடுக்கப்பட்டுள்ள இந்தப் பிரச்சாரப்போரை முறியடிக்க நீங்கள் உண்மை வரலாற்றை ஆயுதமாக ஏந்த வேண்டும். உங்களுடைய கலைப்படைப்புகள் விடுதலைப் போராட்ட காலத்தில் நடைபெற்ற அர்ப்பணிப்பு மிக்க தியாகங்கள், மெய் சிலிர்க்கும் உயிரீகங்கள், உலகையே வியக்கவைத்த தாக்குதல்கள், போர்க்காலத்தில் ஏற்பட்ட சமூகப் பொருளாதார மாற்றங்கள் என்பவற்றைத் திரைப்படைப்புக்களாகக் காட்சிப்படுத்த வேண்டும்.எங்களுக்கான தனிநாடு கிடைக்கும் வரை, இதுபோன்ற பணிகளை நீங்கள் கையிலெடுத்து முன்னெடுப்பீர்கள், என்ற நம்பிக்கையில் தான் எங்களுக்காகப் பல்லாயிரக்கணக்கான மாவீரர்கள் தங்களை ஆகுதியாக்கிக் கொண்டார்கள் என்பதை மறந்து நீங்கள் செயலாற்ற வேண்டாம்.



WEB: WWW.THAMILEELAARASIYALTHURAI.ORG EMAIL: TENCCCCTAT@GMAIL.COM MOB: 0044 777 0028 168

தமிழீழத் தேசியப் படைப்புக்களுக்கான தணிக்கைக் குழுமம்
தமிழீழ அரசியல்துறை
Thamil Eelam National Creative Content Censor Committee - (TEN4C)


2025/09/18 TAT/TEN9BL/20250918/003

பொய்களைச் சித்தரிக்கும் படைப்புக்களுக்கு ஆயுள் குறுகியது. அவை வரலாற்றின் குப்பை தொட்டிக்குள் விரைவாகச் சென்று விடுகின்றன. ஆனால் சத்திய வரலாறு என்றும் சாவதில்லை. அவையே வரலாற்றின் ஆன்மாவாக என்றும் மக்கள் மனதில் நிலைத்து நிற்கும்.

பேரன்புக்குரிய படைப்பாளிகளே!
இன்றைய வர்த்தக உலகில், வர்த்தக நலன் மற்றும் தனிமனித அபிலாசைகளுக்கு அப்பால் நின்று, உண்மை, நேர்மை, பக்கச்சார்பின்மை ஆகிய உயரிய பண்புகளை வரித்து, அடக்கி ஒடுக்கப்படும் எமது மக்களின் விடிவிற்காகப் படைப்பாளிகள் செயற்பட வேண்டுமென நாம் எதிர்பார்க்கின்றோம். நீங்கள் எந்த சக்திகளிடமும் அடிபணிந்து விலை போகாமல், உண்மையின் பக்கம், நீதியின் பக்கம் நின்று இன அழிப்புக்குள்ளான மக்களின் குரலாக, உங்களது படைப்புகள் வெளிவர வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். அவ்வாறான திரைப்படைப்புக்களை உருவாக்குகின்ற படைப்பாளிகளின் கரங்களை இறுகப் பற்றிக் கொள்ள நாங்கள் எப்போதும் தயாராகவுள்ள அதே வேளையில், எமது தமிழீழத்தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு எதிராகவும், எமது கலை, பண்பாட்டு விழுமியங்களுக்குப் பங்கம் விளைவிக்கும் திரைப் படங்கள் அனைத்தையும் தடை செய்வதோடு, **“வெந்து தணிந்தது காடு”** திரைப்படத்தையும் தடை செய்கின்றோம்.

**“தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்”**

| | |
|---|---|
| திரு.ம. கிருபாகரன் | திரு.க. அருளன் |
| பணிப்பாளர் | ஒருங்கிணைப்பாளர் |
| த.தே.ப.தணிக்கைக் குழுமம் | த.தே.ப.தணிக்கைக் குழுமம் |

TEN4C TAT



WEB: WWW.THAMILEELAARASIYALTHURAI.ORG EMAIL: TENCCCCTAT@GMAIL.COM MOB: 0044 777 0028 168